ஒபெக் நிதியளிக்கப்பட்ட மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஒபெக் இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஜுன் 26 ஆம் திகதிய கடன் உடன்படிக்கை இல 1662 P உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவுசெய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவுபடுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் சிவில் வேலைகள் மற்றும் ஆலோசனை சேவைகள் எனப் பெயரிடப்பட்ட இரண்டு கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகை ரூபா 1,022.66 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2017 ஒக்டோபர் 05 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 ஜுன் 28 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2026 மே 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு விடயங்கள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
காணி சுவீகரிப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் வட்டி கொடுப்பனவுகள் நடைமுறையிலுள்ளதென செயற்திட்டமானது வெளிப்படுத்தியிருந்தது, மேலும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய இழப்பீடு ரூபா 701,250 ஆக இருந்தது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியின்போது, செலுத்த வேண்டிய இழப்பீட்டு கொடுப்பனவு ரூபா 14,957,207 ஆக இருந்ததுடன் செலுத்த வேண்டிய இழப்பீடுகளிற்கான குறை ஏற்பாடு ரூபா 14,255,957 ஆகவும் இருந்தது.	14.25	எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 01 இன் பிரிவு 150(ஆ) வின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளின் தற்போதய செயற்பாடுகளின் கீழ், ‘‘காணி சுவீகரிப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக நாங்கள் காட்டியுள்ளோம்’’. இழப்பீட்டு கொடுப்பனவுகளில் அன்னளவாக 99% பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதுடன் காணி சுவீகரிப்பு செயன்முறையின் கீழான இழப்பீடு வழங்களிற்கு தேவையான அனைத்து நடைமுறைப் படிமுறைகளும் பூர்த்திசெய்யப்படுள்ளன என்ற உண்மையின் அடிப்படையிலே இந் நிதிக் கூற்றுக்களுள்ளன. நிதியாண்டு முடிவில் 537 காணித் துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதென ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, மிகுதிகள் இன்னும் பதிவுசெய்தல் செயன்முறையிலேயே உள்ளது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதனை கணக்காளர் உறுதி செய்ய வேண்டும்.

2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள்	இணக்கமின்மை / கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/2019 இன் உப பிரிவு 9.3	மீளாய்வாண்டின் போது இரண்டு வழிநடாத்தல் குழு கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்ததுடன் அது செயற்திட்ட நடவடிக்கைகளின் செயலாற்றலில் பாதகமான முறையில் தாக்கம் செலுத்தலாம்.	2024 இல் தேர்தல்கள் இடம்பெற்றமையும் அதன் விளைவாக நிர்வாக தாமதங்கள் போன்றன காரணமாக, ஓர் வழக்கமான சந்திப்பு முறையினை போன முடியாமலிருந்தது.	சுற்றறிக்கைகளின் தேவைப்பாடு பின்பற்றப்படல் வேண்டும்.
(ஆ)	2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை.	செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டிற்காக எவ்வித உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	ஓர் சுதந்திரமான உத்தியோகத்தரை நியமிப்பதனூடாக எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கைகளின் தேவைப்பாடு பின்பற்றப்படல் வேண்டும்.

3. பௌதீக முன்னேற்றம்

3.1 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(0+000 கி.மீ – 9+500 கி.மீ) இலிருந்தான B174 கடுவெல அத்துருகிரிய வீதிப்பிரிவு மற்றும் (0+000 கி.மீ - 1+210 கி.மீ) இலிருந்தான B451 வல்கம – அத்துருகிரிய ஆகிய வீதிப்பிரிவின் மீள் நிர்மானம் / மேம்படுத்தல். ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 8.1 இன் பிரகாரம், ஆரம்பிப்பு திகதி 2018 சனவரி 29 எனவும் பின்னர் உண்மையான பூர்த்தியாக்கல் திகதி ஆரம்பிப்பு		

	திகதியிலிருந்து 18 மாதங்களாகவிருந்த 2019 ஜுலை 28 ஆக மாற்றியமைக்கப்பட்டிருந்தது எனவும் செயற்திட்டத்தின் பொறியியலாளர் உறுதிசெய்திருந்தார். மேலும், ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 2.1 இன் பிரகாரம் ஆரம்பிப்பு திகதியின் பின்னர் 07 நாட்களிற்குள் ஒப்பந்ததாரர் நுழைவதற்கான உரிமையையும் தளத்தின் அனைத்து பாகங்களினதும் உரிமையினையும் வேலை வழங்குனர் வழங்குவார். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.		
(அ)	i. வேலை வழங்குனர் மேற்கூறப்பட்ட உபபிரிவு 2.1 இன் பிரகாரம் வெற்றிடமான உரிமையினை வழங்கத்தவறியிருந்தார், மேலும் 2023 சனவரி 01 ஆம் திகதிய தொழிநுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையின் பிரகாரம், 2018 பெப்ருவரி 05 இலுள்ளவாறு மொத்தத் தளமும் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை, அதற்குப்பதிலாக சில இடைப்பட்ட பிரிவுகள் மாத்திரம் காணப்பட்டன, அங்கு கூறப்பட்ட பிரிவுகளில் பலபிரிவுகள் தொடரக்கூடிய நிலையில் காணப்பட்டிருக்கவில்லை. எனவே ஒப்பந்ததாரர் இடையூறு ஏற்படும்போது வரையறுக்கப்பட்ட இடைவெளியில் வேலைசெய்யவேண்டி இருந்ததுடன் காணி சுவீகரிப்பு செயன்முறையினை பூர்த்தியாக்காமை காரணமாக தாமதமும் ஏற்பட்டிருந்தது.	தளத்தின் மொத்த உரிமையினையும் ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 2.1 இன் கீழ் வேண்டப்பட்ட படி ஒப்பந்ததாரரிற்கு வழங்க முடியாமல் இருந்ததனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இது காணிசுவீகரிப்பு செயன்முறையில் தாமதங்கள் காரணமாக முதன்மையாக இருந்தது. இக்காரணிகள் இடையூறுகள் மற்றும் ஒப்பந்ததாரரிற்கான வரையறுக்கப்பட்ட வேலை நிபந்தனைகள் என்பனவற்றில் தாக்கம் செலுத்தியிருந்தது.	காணி சுவீகரிப்பு திட்டத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும்.
	ii. அதன்படி, சரியான வழி மற்றும் தளத்தின் உடமை என்பனவற்றினை தொழில்தருனர் வழங்கத்தவறியிருந்தமையினை கருத்தில் கொண்டு 03 தடவைகளில்	தளத்தின் மொத்த உரிமையினையும் ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 2.1 இன் கீழ் வேண்டப்பட்ட படி ஒப்பந்ததாரரிற்கு வழங்க முடியாமல்	காணி சுவீகரிப்பு திட்டத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

795 நாட்கள் காலநீடிப்பு (EOT) செயற்திட்ட பொறியியலாளரினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்கு அப்பால், அதனிடையே ஈஸ்டர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட் 19 போன்றன காரணமாக 46 நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 100 சதவீதமான உடமை 2020 நவம்பரில் செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக EOT வழங்கப்பட்ட காலப்பகுதிக்காக நீடித்தல் கிரயத்திற்காக ரூபா 1,939.01 மில்லியனான 05 கொடுப்பனவுகளினை ஒப்பந்ததாரர் சமர்ப்பித்திருந்தார், மேலும் 2024 ஒக்டோபர் 10 இல் உள்ளவாறு செயற்திட்டமானது ரூபா 318.66 மில்லியனினை செலுத்தியுள்ளது.	இருந்ததனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இது காணிசுவீகரிப்பு செயன்முறையில் தாமதங்கள் காரணமாக முதன்மையாக இருந்தது. இக்காரணிகள் இடையூறுகள் மற்றும் ஒப்பந்ததாரரிற்கான வறையறுக்கப்பட்ட வேலை நிபந்தனைகள் என்பனவற்றில் தாக்கம் செலுத்தியிருந்தது.	
iii. மேலும், நீடிப்பு கிரயமானது ஆனது ஆரம்ப BOQ இன் பிரகாரம் ஏற்பாட்டு கூட்டுமொத்தங்களின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும் அதற்கு முரணாக ரூபா 318.66 மில்லியன் தொகையான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் அது IPC களில் செய்யப்பட்ட வேலையின் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டமானது ஆரம்ப BOQ வில் அனுமதிக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 153.10 மில்லியனையும் தாண்டி ரூபா 386.16 மில்லியன் வரையான ஏற்பாட்டு கூட்டுமொத்த தொகையினை செலுத்தியிருந்தது.	இத்திருத்தியமைக்கப்பட்ட BOQ வில் RDA வின் உள்ளக அனுமதி செயன்முறையின் ஊடாக இம் மேலதிக ஏற்பாடு உள்ளடங்கலாக முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தது.	IPC களை அத்தாட்சிப்படுத்தும் போது ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் தொழில் தருனர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்றதா என்பதனை உறுதிசெய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
iv. இருப்பினும், கூறப்பட்ட கொடுப்பனவுகளின் கீழான மதிப்பீடு காரணமாக, 2024 ஜூலை 03 இல், ரூபா 1,581,612,295 இற்கான கடன் இணக்க சபையின் பரிந்துரைகள் மேலே	ஒப்பந்ததாரர் ரூபா 1,581,612,295 தொகையான ஓர் கொடுப்பனவினை சமர்ப்பித்திருந்தார், அது தள மேந்தலைகள், தலைமை	காணி சுவீகரிப்புத்திட்டத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு செயன்முறை அமுல்படுத்தப்பட்டதனையும் தொழில் வழங்குனரின்

	சுட்டிக்காட்டப்பட்ட தாமத காலப்பகுதியுடன் தொடர்புபட்ட தள மேந்தலைகள், இடையூருகளினால் ஏற்பட்ட கிரயம், விளைவற்றதனாலான கிரயம், விடுவிக்கப்படாத பிடிகாசுகளின் கிரயம், நீடிக்கப்பட்ட பூர்வாங்கல்கள் என்பனவற்றிற்காக ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் கடன் இணக்க சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பொறியியலாளர் / PMU வினால் ஓர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது, மேலும் மீள்மதிப்பீட்டு தொகை ரூபா 298,070,447 ஆக இருந்ததுடன் ஒப்பந்ததாரர் மற்றும் தொழில்தருனர் ஆகிய இருவரும் 2025 சனவரி அளவில் DAB தீர்மானத்தின் மீது திருப்தியின்மை அறிவிப்பினை அனுப்பியிருந்தனர். அதன்படி செயற்திட்டத்தின் கிரயமானது திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் காணிசுவீகரிப்பு செயன்முறையினை பூர்த்திசெய்யாததன் காரணமாக ரூபா 298,070,447 இனால் தேவையற்ற விதத்தில் அதிகரிக்க வேண்டியிருக்கும்.	அலுவலக மேந்தலைகள், இடையூருகளினால் ஏற்பட்ட கிரயங்கள், விலைவற்ற கிரயங்கள் மற்றும் ஏனையவைகள் போன்ற பல்வேறு கூறுகளினை உள்ளடக்குகின்றது. இருப்பினும் இக்கிரயக்கூறுகள் யதார்த்தமான மதிப்பீடுகளில் முழுமையாக உறுதிப்படுத்தப்படவோ அல்லது பிரதிபலிக்கவோ இல்லை. கடன் இணக்க சபைச் செயன்முறையின் ஒரு பகுதியாக 2024 திசெம்பர் 27 ஆம் திகதிய DAB யின் தீர்மானத்தினை பின்பற்றி கொடுப்பனவுகளை மீள்மதிப்பீடு செய்ய பொறியியலாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார், அது தொழில்வழங்குனரினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இவ்விடயம் இணக்கப்பாட்டுடனான தீர்ப்பனவு அல்லது நடுவர் தீர்ப்புடன் செய்யப்படலாம்.	உரிமையாண்மையானது ஒப்பந்த நிபந்தனைகளின் (COC) பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டதனையும் உறுதி செய்ய ஓர் முறையான விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மேலும், இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் இல 43, 47 மற்றும் 50 இற்காக பயன்படுத்தப்பட்ட தற்போதைய குறிகாட்டிகளுடன் தொடர்புபட்டவைகளுடன் சேர்த்து மற்றுமொரு கொடுப்பனவு (பிணக்கு 5) கோரப்பட்டிருந்தது. அதன் கீழ், ரூபா 24,603,954 ஆன ஓர் கொடுப்பனவு ஒப்பந்ததாரரினால் கோரப்பட்டிருந்தது. மேலும் பிணக்கு 5 இற்கான 2024 செப்தம்பர் 30 ஆம் திகதிய DAB	ஒப்பந்ததாரரின் அனுமதிக்கப்படாத கொடுப்பனவுகளினால் அதே சூழ்நிலைகளின் கீழ் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெறுவதற்கான உரிமையினை பாதுகாக்க தொழில் வழங்குனர் ஓர் திருப்தியின்மை அறிவிப்பினை சமர்ப்பித்தார்.	செயற்திட்ட பணிப்பாளர் உரிய உத்தியோகத்தர்களை வினைத்திறனாக ஒருங்கிணைப்பதனூடாக நட்டங்களினை குறைக்கவும் தொழில் வழங்குனரின் உரிமை, ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டதனை உறுதி செய்யவும் தேவையான

	தீர்மானத்தின் பிரகாரம் IPC இல 43, 47 மற்றும் 50 உடன் தொடர்புபட்ட கிரயங்களில் மாற்றங்களிற்கான சீராக்கம் காரணமாக ஒப்பந்ததாரர்கள் எவ்வித மிகுதி கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக்கட்டணங்கள் என்பனவற்றிற்கு உரித்தானவர்கள் அல்ல, மேலும் கிரயங்களில் மாற்றங்களிற்கான சீராக்கங்களுடன் தொடர்புபட்டு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையாக எவ்வித கொடுப்பனவுகளையும் மீளப்பெற தொழில்வழங்குனர்கள் உரித்துடையவர்கள் அல்ல. இருப்பினும், ஒப்பந்ததாரர் மற்றும் தொழில் வழங்குனர் ஆகியோர் பிணக்கு இல 5 இற்கான மேற்கூறப்பட்ட தீர்மானத்தின் மீது DAB இற்கு 2024 ஒக்டோபர் அளவில் திருப்தியின்மை அறிவிப்பினை அனுப்பியிருந்ததுடன் தொழில் வழங்குனரின் திருப்தியின்மை அறிவிப்பு கணக்காய்விற்கு ஓர் சிக்கலாக இருந்தது.	இது தேவையானதொன்றாகும் ஏனெனில் DAB தீர்மானமானது ஒப்பந்ததாரரின் பெறுவனவினையோ அல்லது தொழில் வழங்குனரின் மீளப்பெறல் வேண்டுகோளினையோ ஏற்றுக்கொள்ளவில்லை. ஆட்சேபனை இன்றி தீர்மானத்தினை ஏற்றுக்கொள்ள ஏதேனும் எதிர்கால நடுவர் தீர்ப்பு அல்லது தீர்ப்பனவு நடவடிக்கைகள் மீது பின்பற்றப்படும் சட்டப்படியான உரிமங்களிலிருந்து தொழில்வழங்குனர் தடுத்திருக்கப்பட்டிருக்கலாம்.	நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(இ)	பொதி இல OFID-3/01 இற்கான ஒப்பந்ததாரர் இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் கொடுப்பனவிற்காக விடுவிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும், செலுத்த வேண்டிய திகதியிலிருந்து 05 தொடக்கம் 31 நாட்கள் தாமதத்துடன் 05 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிற்கே செயற்திட்டமானது கொடுப்பனவு செய்திருந்தது. அதன் பெறுபேறாக தாமத காலப்பகுதிக்காக ஒப்பந்ததாரர் ரூபா 20.07 மில்லியன் வட்டியினை பெற்றிருந்தார். ஒப்பந்ததாரர்களின் கொடுப்பனவில் தாமதமானது செயற்திட்ட கிரயத்தினை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தியமை அவதானிக்கப்பட்டது.	விஞ்சிய BOQ அளவுகளுடன் பொருந்தும் வகையில் B.O.Q ஆனது திருத்தியமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட B.O.Q இனை பெற்றுக் கொள்வதற்கும் மேலதிக கிரயங்களிற்கான ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்வதற்குமான கடன் வழங்குனரின் ஒத்திசைவு வரை IPC கொடுப்பனவுகள் தாமதித்திருந்தது.	செயற்திட்ட பணிப்பாளர் உரிய உத்தியோகத்தர்களை வினைத்திறனாக ஒருங்கிணைப்பதனூடாக நட்டங்களினை குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3.2 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு கடன் மற்றும் GOSL கூறு என்பனவற்றின் கீழ் முறையே ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 660 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தினால் வெளிநாட்டு கடன் ஒதுக்கீட்டில் 45 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 45 மில்லியனும் GOSL கூறில் 94.8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 625.8 மில்லியனும் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.	இவ் ஆண்டின் போது பாலம் இல 9/1 இன் மீள்நிர்மானத்தினை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது, ஆனால் தவிர்க்கமுடியாத பெறுகைத் தாமதம் காரணமாக வேலையானது எதிர்பார்க்கப்பட்டபடி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஒப்படைப்புக் கட்டணங்களை தவிர்பதற்காக பணவளிப்புத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பனவற்றுடன் இணங்கி நடாத்தல் வேண்டும்.
(ஆ)	செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையானது ஐ.அ.டொலர் 17 மில்லியனிற்காக 2015 ஜூன் 26 இல் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2019 ஜூன் 30 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நிர்மான நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக கடனின் முடிவுறுத்தல் திகதி 2026 மே 10 வரை கடன் வழங்கும் முகவரினால் பல்வேறு தடவைகளில் நீடிக்கப்பட்டிருந்தது. கடன் மீளச்செலுத்தலானது 2025 இல் ஆரம்பமாகியிருந்தும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கடன் வசதிகளில் 12.5 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 2.13 மில்லியனை செயற்திட்டத்தினால் மீளப்பெறமுடியாமல் இருந்தது.	1.2.2(அ)(i) இல் விபரிக்கப்பட்ட படி செயற்திட்டமானது காணி சுவீகரிப்பில் தாமதம் மற்றும் நிதி நெருக்கடி போன்றன காரணமாக தாமதித்திருந்தது. அதன்படி கடன் செல்லுபடியாகும் காலமானது மிகுதி கடன் ஒதுக்கீட்டினை பயன்படுத்துவதற்காக நீடிக்கப்பட்டது.	ஒப்படைப்புக் கட்டணங்களை தவிர்பதற்காக தள்ளுபடித் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பனவற்றுடன் இணங்கி நடாத்தல் வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

ஆளணி நிலை	பதவிகளின் எண்ணிக்கை			முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
	அனுமதிக்கப்பட்டவை	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மை	வெற்றிடங்களின்/ மேலதிகங்களின் எண்ணிக்கை		
உள்ளக கணக்காய்வாளர்	1	0	1	உள்ளக கணக்காய்வாளர் பதவி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்படவில்லை.	ஓர் வினைத்திறனான உள்ளக கணக்காய்வு செயன்முறை இருப்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும்.

3.4 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 506 அரச காணித்துண்டுகள் உட்பட 2747 காணித்துண்டுகளை சுவீகரிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன், காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரவு 17 இன் கீழ் ரூபா 1,682 மில்லியன் தொகையான இழப்பீடும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, 2024 திசெம்பர் 31 வரை இழப்பீடுகளை செலுத்துவதில் தாமதத்தின் மீதான வட்டியாக கூட்டு மொத்தம் ரூபா 345 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 538 காணித்துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன்,	பிரிவு 44 இன் கீழ் காணியினை பதிவு செய்தல் உரிய பிரதேச செயலகங்களினால் செய்யப்படுகின்றன. பதிவுச் செயன்முறையினை விரைவு படுத்தும்படி பிரதேச செயலகங்களிற்கு பல்வேறு தடவைகள் வேண்டுகோள்விடுத்திருந்தும், பிரதேச செயலகங்களில் கானப்படும் வளங்களின் பற்றாக்குறை காரணமாக தாமதித்திருந்தது.	காணி சுவீகரிப்புத்திட்டத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு செயன்முறை அமுல் படுத்தப்படல் வேண்டும்.

மொத்த துண்டுகளில் 80.5 சதவீதமானவை காணி சுவீகரிப்பு செயன்முறையை பூர்த்திசெய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டது. எனவே மீளாய்வாண்டில் மூன்று வீதிகளினதும் மேம்படுத்தல் வேலைகளின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றலானது 100 சதவீதத்தினை காட்டியிருந்ததுடன் காணி சுவீகரிப்பு வேலைகளின் செயலாற்றல் 88.7 சதவீதத்தினையும் காட்டியிருந்தது.